## 3. அ, ஆ, இ கதைகள்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

**மாற்று 1:**
ஒரு பெரிய தாளில் (A3 அல்லது A2) நெடுங்கணக்கைத் தெளிவாக எழுதி நிறந்தீட்டவும் (ஒன்றின் பின் ஒன்றாக செங்குத்தாக, தேவையெனில் ஒவ்வொரு எழுத்துக்குப் பின் எழுதக்கூடியதாக இரு பத்திகளாக எழுதவும்) பின்னர், ஒரு குறிப்பிட்ட எழுத்தினைத் தொடக்கமாகக்கொண்டு ஒரு சொல் அல்லது ஒரு சிறிய வாக்கியம் எழுதுக.

**மாற்று 2:**
மாணவர் குழுக்கள் 2 – 3 நீண்ட தாள் துண்டுகளை (A3 அளவு, செங்குத்தாக நான்கு கீற்றுகளாக வெட்டவும்), பசையிட்டு அவற்றை ஒட்டி ஒரு நீண்ட கீற்றாக அமைத்து, பின்னர் அவர்கள் (பொருளற்ற) வாக்கியங்களை அல்லது ஒரு கதையினை ஆக்குவர், வாக்கியத்தின் ஒவ்வொரு சொல்லும் நெடுங்கணக்கின் ஒழுங்குமுறையில் அமையும் எழுத்தைக்கொண்டு தொடங்கும்! எ-டு: அன்பான ஆசை இளமகளே ஈன்ற உன்.

## 4. சுய உருவப்படம், சுயவிவரம்

2 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

அ) ஆசிரியரும் மாணவரும் ஓர் உருவப்படத்தில் எவற்றை உள்ளடக்கவேண்டும் என்பது பற்றி உரையாடல்: பெயர், முதற்பெயர், வயது, பொழுது போக்குகள், பிடித்த உணவு, பிடித்த இசை, பிடித்தபாடம், விரும்பிய நூல், ஆசிரியர் பிறந்த நாடு அவரின் முகவரி முதலானவை.

ஆ) பின்னர் ஒரு தாள் துண்டில் (A3 அல்லது A4, தடித்த தாள் விரும்பத்தக்கது) தங்களுடைய தன்னுருவப் படத்தை ஆக்கிக்கொள்வர். இதனை ஒரு வரைவு, ஓர் ஒளிப்படம், படங்கள் மற்றும் வேறு பொருள்கள் ஆகியவற்றால் அழகுசெய்யலாம்.

இ) நிறைவாக, சுவரொட்டிகள் வகுப்புக்கு வழங்கப்படுகின்றன. மாணவர்கள் எந்தச் சுவரொட்டியில் குறிப்பாக எது சிறப்பாக அமைந்துள்ளது என்பதை தீர்மானிப்பர்.

## 5. ஒன்று சேர்ந்து செயற்படல்: கதை மரம் அல்லது விருப்பு மரம்

2 - 9 ஆந் தரம் | 70 மணித்துளிகள்

**கருவிகள்:**
பெரிய தாள் A1
பச்சைத் தாள்கள் A4

அ) ஒரு பெரிய தாள் துண்டில் (தாள் அல்லது 2 flipchart பக்கங்கள்) மாணவர்கள் தொகையான கொப்புகளும் கிளைகளுமுள்ள ஒரு பெரிய மரத்தைக் கீறுவர். மேலும் பல இலைகளைச் சேர்ப்பதற்குப் போதுமான இடம் இருக்கவேண்டும்.

ஆ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் பச்சைத்தாள் துண்டினைப் பெறுவர் அதனை மரத்துக்கு இரண்டு இலைகளாக வெட்டுவர். மாணவர்கள் ஒவ்வொரு இலையிலும் ஒரு சிறு கதையினை அல்லது தமது விருப்பினை எழுதுவர் (அந்த விருப்பினை மரத்தில் கட்டி தொங்கவிடலாம்).

இ) இலைகள் மரத்தில் பொருத்தப்படுகின்றன மாணவர்கள் அவற்றைத் தம்முள் படித்துக்கொள்கின்றனர்.

